நல்லூர் - 01 - 1272

# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2015

| தரம் : 09 | செயன்முறைத் தொழினுட்பத்திறன்<br>பெயர் / சுட்டெண் : ........................................................ | நேரம் :<br>1.30 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I
சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. A சட்டகத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கை முறை
   1. சேனைப் பயிர்ச் செய்கை
   2. சுழற்சிமுறைப் பயிர்ச் செய்கை
   3. சமஉயரக் கோட்டுப் பயிர்ச் செய்கை
   4. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை

02. மீள் காடு வளர்ப்பு செயன்முறையின் சிறிய காடு வளர்ப்பு
   1. 0 - 10 வருடம்
   2. 25 - 100 வருடம்
   3. 10 - 25 வருடம்
   4. 100 வருடத்திற்கு மேல்

03. பீடைக் கட்டுப்பாட்டிற்கு சிறந்த உபகரணம்
   1. மருந்து விசுறுதல்
   2. வலை விரித்தல்
   3. பீடைகளைப் பிடித்து அழித்தல்
   4. பெரோமன் கண்ணி அமைத்தல்

04. வெறுப்பூட்டும் பயிர்களில் ஒன்று
   1. மல்லிகை 2. செவ்வந்தி 3. றோசா 4. வல்லாரை

05. கறையானைக் கட்டுப்படுத்த பயன்படும் இரசாயணப் பொருள்
   1. மும்பை சுப்பர் பொசுபேற்று
   2. ஐதரொட்சைட்
   3. குளோரோபைரி பொஸ்
   4. இருகாபனேற்று

06. தாவர விலங்கு கழிவுகளை மூலப்பொருளாக பயன்படுத்தி நுண்ணங்கிகள் மூலம் இசைவடையச் செய்தல்
   1. உயிர்வாயு 2. சேதனப்பசளை 3. அசேதனப்பசளை 4. கூட்டெரு

07. உயிர் வாயுவில் எரிதலுக்குப் பயன்படும் வாயு
   1. மீதேன் வாயு 2. ஒட்சிசன் வாயு 3. திரவப்பெற்றோலியம் 4. காபன் வாயு

08. உணவுக் கூம்பகத்தில் அடிப்படையில் நாம் அதிகமாக எடுக்கும் உணவுக் கூட்டம்
   1. தானியம், மரக்கறிகள், பழங்கள்
   2. பருப்பு வகைகள், தானியங்கள், எண்ணெய்வகை
   3. மரக்கறிகள், பழங்கள், பருப்பு வகை
   4. கொழுப்பு, பழங்கள், கீரைவகைகள்

09. வயிறு ஊதல், வலி குமட்டல், வாந்தி, உடல் வெளிறல் போன்றவை எந்த நோய்க்குரிய அறிகுறிகள்
   1. வயிற்றுப்போக்கு 2. அஜீரணம் 3. ஒவ்வாமை 4. புழு நோய்கள்



kalvi.lk

10. சோளம், தேங்காய், பலா, மங்குஸ்தான் றம்புட்டான், மிளகு, கோப்பி போன்றன எந்த மாகாணத்தில் அதிகமாக விளையும்

1. மேல் மாகாணம்
2. கிழக்கு மாகாணம்
3. வடமத்திய மகாணம்
4. தென் மாகாணம்

11. பாலை உறையச் செய்யும் பற்றிரியா

1. பல்கரியம்
2. லக்ரோ பசிலஸ் பல்கரிகஸ்
3. ஆடோ மோனஸ்
4. இக்ரோ பக்ரா

12. எரிவாயு அடுப்பின் மேற்புறத்தில் தட்டு அல்லது இறாக்கை இருப்பின் இரண்டுக்குமிடையே உள்ள தூரம்

1. 15 cm
2. 50 cm
3. 100 cm
4. 18 cm

13. எரிவாயு அடுப்பில் தீப்பொறியை உருவாக்குவது

1. வாயு வழங்கி
2. சுவாலை வழங்கி
3. தீப்பொறிப் பிறப்பாக்கி
4. தொடக்க குமிழ்

14. விரைவாக உணவு சமைக்க உகந்த அடுப்பு

1. எரிவாயு அடுப்பு
2. மண்ணெண்ணெய் அடுப்பு
3. விறகு அடுப்பு
4. அமுக்க அடுப்பு

15. கத்தி அலகுகளை செய்வதற்கு பொருத்தமான உலோகம்

1. இரும்பு
2. வெள்ளி
3. கறைபடியா உருக்கு
4. வெண்கலம்

16. சிறு வணிகத்தைத் திட்டமிடும் போது கருத்திற் கொள்ள வேண்டிய துணை நிலைச் சேவைகள்

1. பணமும் வங்கியும்
2. சந்தை வாய்ப்பு
3. தொழிலாளர் தொகை
4. மேற்கூறிய யாவும் பிழை

17. சிறு வணிகர்கள் முதலீடு செய்யக் கூடிய மாற்று வழிகளில் ஒன்றல்லாதது

1. நிலையான சொத்துக்களில் முதலீடு செய்தல்
2. வங்கிகளில் முதலீடு செய்தல்
3. தனிப்பட்டவர்களுக்கு கடன்களை வழங்குதல்
4. பழைய கடன்களைக் கட்டி முடித்தல்

18. வணிகத்திற்கு உள்வரும் பணத்தினையும் வெளிச்செல்லும் பணத்தினையும் பதிவு செய்யும் இடம்

1. ஐந்தொகை
2. காசேடு
3. பொருட்பதிவேடு
4. வருமானக்கூற்று

19. எரிவாயு அடுப்பின் ரெகுயுலேற்றரை எத்தனை வருடத்திற்கு ஒருமுறை மாற்ற வேண்டும்

1. 3 வருடம்
2. 2 வருடம்
3. 5 வருடம்
4. 7 வருடம்

20. இடர் வரும் காலத்தில் வணிகர்களை காப்பாற்றும் நிறுவனம்

1. காப்புறுதி
2. வங்கி
3. பிரதேச செயலகம்
4. கூட்டுறவுச் சங்கம்

(1 x20 = 20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினாவிற்கும், ஏனைய இரண்டு வினாகளுக்குமாக**
**மொத்தம் 3 வினாக்களிற்கு விடை தருக.**
**இதற்கு விடைத்தாளைப் பயன்படுத்துக.**

01. 1) நீர் வகுப்பறையில் செய்த செய்முறை ஒன்றை எழுதுக.
    2) இச் செயன்முறைக்கு பயன்படுத்திய பொருட்கள் உபகரணங்கள் எவை?
    3) இச்செயன்முறை மூலம் நீர் பெற்ற அனுபவம் யாது?

(3 + 3 + 4 =10 புள்ளிகள்)

02. 1) பண்ணைக் கழிவுப் பொருட்கள் 5 தருக?
    2) கூட்டெரு என்றால் என்ன?
    3) உயிர்வாயு எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது?
    4) மண்ணோடு சேதனப்பசளையை சேர்ப்பதால் கிடைக்கும் அனுகூலம் 4 தருக.

(3 + 2 + 2 + 3 =10 புள்ளிகள்)

03. 1) தவறான உணவுப் பழக்கவழக்கத்தால் ஏற்படும் நோய்கள் எவை?
    2) வடமாகாணத்தில் அதிகமாகக் கிடைக்கும் உணவுப் பொருட்கள் எவை?
    3) பொதியிடல் மூலம் பெறப்படும் அனுகூலம் 5 தருக?

(3 + 3 + 4 =10 புள்ளிகள்)

04. 1) எரிவாயு அடுப்பில் வாயுக்கசிவு ஏற்பட்டுள்ளது என நீர் கண்டால் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் 5 தருக.
    2) கலக்கும், அரைக்கும் உபகரணத்தைப் பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 4 தருக.
    3) அமுக்க அடுப்பில் அமுக்கம் உச்ச நிலை அடைந்து நீராவி வெளியேறும் பகுதியின் பெயர் என்ன?

(4 + 4 + 2 = 10 புள்ளிகள்)

05. 1) பெருமளவான முயற்சியாளர் சிறுவணிகத்தைத் தெரிவு செய்வதற்கான காரணங்கள்.
    2) சிற்றளவு வணிகர்கள் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டிய நிறுவனங்கள் 4 தருக.
    3) காசேடு என்றால் என்ன?
    4) திறைசேரி உண்டியல், திறைசேரிமுறி என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக.

(2 + 4 + 2 + 2 = 10 புள்ளிள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community | Whatsapp Channel | Facebook Page